FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120370

u/s 173 BNSS 13/AC/2025

1. District : மாவட்டம் Salem PS: காவல்நிலையம் V+AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 08.08.2025

2. (i) Act சட்டம்: The Prevention of. Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Corruption Act 1988 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: as amended in 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 1) 23.07.2025 at about 11.30 hrs.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : 2) 05.08.2025 at about 15.00 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.08.2025 Time : நேரம் 16.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. II. 08.08.2025 Time : நேரம் 08.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 3km. North.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி Office of Joint commissioner of Labour, Salem.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Adhi Arumugam @ C. Arumugam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Chinnathambi

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 61 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Building Mation worker (g) Address : முகவரி No. 3/252, Sithamur, Thalavaipatti Post, Salem 636302.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Balamurugan, Junior Assistant, O/o The Joint Commissioner Labour, Salem.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Enclosed in separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 8/8/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
08/08/2025.

15. Date & Time of despatch to the court: 08/08/2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 09.00 hrs.

Name: பெயர் M. Nallammal,
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
VAC, Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 07.08.2025-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை சுமார் 16.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, ஆதி ஆறுமுகம் (எ) C.ஆறுமுகம், S/o. சின்னதம்பி, தலைவர், தமிழ்நாடு அனைத்து மேஸ்திரிகள் நலன் மற்றும் அமைப்புச்சாரா & கட்டிட தொழிலாளர்கள் உரிமை பாதுகாப்பு சங்கம், எண்.3/252, சித்தனூர், தளவாய்பட்டி (அஞ்சல்), சேலம் - 636302, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நாள்:07.08.2025, அனுப்புதல்: ஆதி ஆறுமுகம் (எ) C.ஆறுமுகம், S/o. சின்னதம்பி, தலைவர், தமிழ்நாடு அனைத்து மேஸ்திரிகள் நலன் மற்றும் அமைப்புச்சாரா & கட்டிட தொழிலாளர்கள் உரிமை பாதுகாப்பு சங்கம், எண்.3/252, சித்தனூர், தளவாய்பட்டி (அஞ்சல்), சேலம் - 636302. பெறுதல்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம். ஐயா, நான் சித்தனூரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். கட்டிட மேஸ்திரி ஆக வேலை செய்து வருகிறேன். என்னை போல் கட்டிட மேஸ்திரி வேலை செய்பவர்களுக்கு தொழிலாளர் நலவாரியம் மூலம் பல்வேறு உதவிகளை அரசு செய்துவருகிறது. அதை முறையாக பெறுவதற்காக கட்டிட வேலை செய்யும் மேஸ்திரிகள் மற்றும் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து "தமிழ்நாடு அனைத்து மேஸ்திரிகள் நலன் மற்றும் அமைப்புச்சாரா & கட்டிட தொழிலாளர்கள் உரிமை பாதுகாப்பு சங்கம்" என்ற பெயரில் 127 உறுப்பினர்களைக் கொண்டு சங்கம் ஆரம்பித்து அதற்கான சட்டவிதிகளை உறுவாக்கினோம். அதன் தலைவராக நான் இருந்துவருகிறேன். இந்த சங்கத்தை தொழிற்சங்க சட்டத்தின் கீழ் தொழிலாளர் நலத்துறையில் பதிவு செய்ய நான் அனைத்து பணிகளையும் செய்து வருகிறேன். எனது நண்பர் வாழப்பாடியை சேர்ந்த ராஜா என்பவர் ஏற்கனவே இதேபோல் "சேலம், ஈரோடு, நாமக்கல், தர்மபுரி மாவட்டம் இதயதாமரை அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர்கள் சங்கம்" என்ற சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறார். அவர் அந்த சங்கத்தின் பெயரை "தமிழ்நாடு இதயதாமரை அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர்கள் சங்கம்" என்று பெயர்மாற்ற ஏற்பாடு செய்துவருவதாக தெரிவித்தார். ஆகையால் நாங்கள் இருவரும் இதுகுறித்து விபரம் கேட்க கடந்த 2025 ஜூலை மாதம் இரண்டாவது

வாரத்தில் சேலம் ஏற்காடு ரோடு, கோரிமேட்டில் அமைந்துள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகம் சென்று அங்கு சங்கங்களை பதிவு செய்யும் பிரிவில் இளநிலை உதவியாளர் ஆக பணிபுரியும் திரு.பாலமுருகன் என்பவரை சந்தித்து விபரம் கேட்டோம். அவர் இந்த இரண்டு வேலைகளுக்கும் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும், என்றும் தானே ஆன்லைனில் பதிவு செய்து வேலைகளை முடித்து கொடுத்துவிடுவதாகவும், அதற்கு செலவாகும் என்றும் தெரிவித்தார். அதற்காக என்னை சங்கம் சம்பந்தமான ஆவணங்களுடன் மனு ஒன்றை கொடுக்கச்சொன்னார். அதேபோல் திரு.ராஜா அவர்களையும் மனு கொடுக்க சொன்னார். அதன்படி நாங்கள் இருவரும் 23.07.2025-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் தொழிலாளர் நலத்துறை அலுவலகம் சென்று இளநிலை உதவியாளர் திரு.பாலமுருகன் அவர்களை சந்தித்து அவரிடம் சங்கம் சம்பந்தமான அவர் கேட்ட ஆவணங்களை தனித்தனியாக கொடுத்தோம். அவர் அதனை பெற்றுக்கொண்டு ஆன்லைனில் பதிவு கட்டணம் செலுத்த வேண்டும் என்று என்னிடம் ரூ.1,500/-ம், திரு.ராஜா அவர்களிடம் ரூ.500/-ம் பெற்றுக்கொண்டார். மேலும் இந்த வேலைகளை முடித்துக்கொடுக்க தனக்கும் தனது உயர் அதிகாரிகளுக்கும் சேர்த்து புதியதாக பதியவேண்டிய எனது சங்கத்திற்கு ரூ.20,000/-மும், பெயர் மாற்றத்திற்கு திரு.ராஜா அவர்களின் சங்கத்திற்கு ரூ.13,000/-மும் தனியாக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். ஆன்லைனில் பதிவு செய்தபின் உங்களுக்கு கடிதம் வரும், அதனை எடுத்துக்கொண்டு என்னை வந்துபாருங்கள் என்று சொன்னார். பின்னர் பதிவு தபால் மூலம் எனது சங்கத்தின் ஆவணங்களை 13.08.2025-ம் தேதி முற்பகல் 12.00 மணிக்கு பரிசீலனைக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்தி தொழிலாளர் இணை ஆணையர், சேலம் அவர்களின் ந.க.எண்.ஆ3/4058/2025, என்ற 29.07.2025 தேதியில் கையெழுத்திடப்பட்ட கடிதம் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதேபோல் திரு.ராஜா அவர்களுக்கு 19.08.2025-ம் தேதி ஆவணங்களை தாக்கல் செய்ய தொழிலாளர் இணை ஆணையர், சேலம் அவர்களின் ந.க.எண்.ஆ3/4112/2025, என்ற 29.07.2025 தேதியில் கையெழுத்திடப்பட்ட கடிதம் வரப்பெற்றது. அந்த கடிதங்களை எடுத்துக்கொண்டு நானும் திரு.ராஜா அவர்களும் கடந்த 05.08.2025-ம் தேதி மதியம் சுமார் 3.00 மணிக்கு தொழிலாளர் நலத்துறை அலுவலகம் சென்று அங்கிருந்த இளநிலை உதவியாளர் திரு.பாலமுருகன் அவர்களை சந்தித்து எங்களுக்கு வந்திருந்த கடிதங்களை காண்பித்த போது, அவர் உங்களது மனுக்களை ஆன்லைனில் பதிவு செய்துவிட்டேன், அதனால் verification-க்குதான் வரச்சொல்லியிருக்கிறோம் என்று

ஆன்லைனில் பதிவு செய்த ரசீதுகளை கொடுத்தார். பின்னர் சொன்னமாதிரி பணம் ரெடிபண்ணிட்டீங்களா என்று கேட்டார். நான் ஏன் எனக்கு ரூ.20,000/- அவருக்கு ரூ.13,000/- என்று கேட்டேன். அதற்கு அவர் அவருடையது Amendment, உங்களுடையது புதுசு என்பதால் அதிகம் என்றும் சரி ரூ.2,000/- குறைத்து ரூ.18,000/- உங்களுடையதுக்கு கொடுத்திடுங்க என்று சொன்னார். நான் மொத்தமாக கொடுக்கமுடியாது முதலில் ரூ.5,000/- மட்டும் கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியெல்லாம் பிரித்து பிரித்து வேண்டாம் என்றும், verification-க்கு முன்பு பாதி பணம் அதாவது உங்களது ரூ.10,000/-, அவருடையது ரூ.5,000/- கொடுத்திடுங்க. பின்னர் Verification முடிந்து NOC வந்தவுடன் மீதி பணத்தை கொடுத்திடுங்க, அதன்பின்னர் Certificate வாங்கி கொடுத்திடறேன் என்று சொன்னார். சொன்னமாதிரி பணம் மற்றும் Record உடன் வெள்ளிக்கிழமை வந்திடுங்க, இரண்டு பேருடையதையும் பார்த்துவிடுகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கும் எனது நண்பர் திரு.ராஜா அவர்களுக்கும் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு.பாலமுருகன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எங்களது சங்கம் சம்பந்தமான பதிவுகளை செய்ய விருப்பமில்லை. ஆகையால் இளநிலை உதவியாளர் திரு.பாலமுருகன் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-xxxxxx (C.ஆறுமுகம்)) இந்த புகாரில் உள்ள விபரங்கள் எனக்கும் தெரியும். (ஒப்பம்/-xxxxxx (ராஜா)).

Sir, Received the above computer typed complaint on 07.08.2025 at about 16.00 Hrs. Sd xxxx (M.Nallammal) 07/08/2025, Inspector of Police, V & AC, Salem.

Sir, The genuineness of the informants were verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the DVAC and registered a case in Salem V & AC Cr.No.13/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 08.08.2025 at 08.00 hrs. Sd xxxx (M.Nallammal) 08/08/2025, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 09/08/2025
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.